# கொரோனா விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு



■ விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கல்லூரியில், முதல்வர் ராஜவேல் தலைமையில் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு முகாம் நடந்தது.

**விருத்தாசலம், மார்ச் 12–**

விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கல்லூரியில், கொரோனா வைரஸ் விழிப்புணர்வு முகாமில் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் ராஜவேல் தலைமை தாங்கினார். திட்ட அலுவலர்கள் கண்ணகி, ஹெலன் ரூத் ஜாய்ஸ், பிரவீன்சாபு முன்னிலை வகித்தனர்.

அதில், கொரோனா பாதிப்பு, தடுப்பு வழி முறைகள், அடிக்கடி கைகளை கழுவுதல், முக கவசங்கள் அணிதல், காய்ச்சல் பாதித்தவர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்த உறவினர்கள் குறித்த தகவலை தெரிப்பது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, கொரோனா வைரஸ் விழிப்புணர்வு குறித்து மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் உறுதிமொழி ஏற்றனர்.